BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# திருவள்ளூர் மாவட்டத்தில் காணப்படும் நடுகற்கள் – ஓர் ஆய்வு

# Hero Stones in the Tiruvallur District: A Historical and Cultural Study

ஆய்வாளர்: க. அனுசுயா

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தொல்லியல் துறை, சென்னை - 600008.

நெறியாளர்: முனைவர் இரா. சிவானந்தம்

இணை இயக்குநர் (தொ.நு), தொல்லியல் துறை , சென்னை -600008.

Scholar; K. **Anusuya**

Full Time Research Scholar, Department of Archaeology, Chennai-600 008. anuvennila10@gmail.com

Guide: **Dr. R. Sivanantham**

Joint Director (Tech), Department of Archaeology, Chennai- 600 008.

**Abstract**

Hero stones occupy a significant place in the cultural and historical traditions of the Tamils. These memorial stones were erected in memory of warriors who attained heroic death in battle and stand as important archaeological and epigraphical sources for understanding the social, political, religious, and cultural history of ancient Tamil society. This study focuses on the Hero stones discovered in Tiruvallur District, particularly those found in places such as Pāgasālai, Keezhappoodi, Thekkalur, and Tiruvottiyur.The study examines Navakanda hero stones, Thoonguthalai hero stones, and Arikanda sculptures found in these regions. Literary references from Tolkappiyam and Purapporul Venbā Mālai are used to explain the tradition and procedures associated with the erection of Hero stones. The inscriptions engraved on these stones reveal information regarding hero worship, self-sacrificial rituals, Kotravai worship, land grants, and the honours bestowed upon fallen warriors. The Navakanda hero stones of Pāgasālai and Keezhappoodi reflect the tradition of self-decapitation as an act of offering and devotion. Similarly, the Thoonguthalai hero stone found at Thekkalur represents the sacrificial practices associated with Kotravai worship. The Arikanda sculptures at Tiruvottiyur further highlight the significance of warrior traditions and memorial practices in medieval Tamil society. The study concludes that the Hero stones of Tiruvallur District serve as valuable historical records that illuminate the region's martial traditions, religious beliefs, social customs, and epigraphical heritage. Furthermore, the presence of both Tamil and Telugu inscriptions indicates the multilingual and multicultural interactions prevalent in the region during the medieval period. Thus, these Hero stones constitute an important source for the study of Tamil cultural history and archaeology.

**Key Words**: Navakanda, Arikanda, Thoonguthalai, Archanabogam, Neck Ornament, kotravai, sword.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர் பண்பாட்டில் வீரத்தைப் போற்றும் மரபின் அடையாளங்களாக நடுகற்கள் விளங்குகின்றன. போரில் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நிறுவப்பட்ட இந்நடுகற்கள், அக்கால சமூக, அரசியல், சமய மற்றும் பண்பாட்டு வரலாற்றை வெளிப்படுத்தும் முக்கியமான தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் சான்றுகளாக அமைந்துள்ளன. இவ்வாய்வில் திருவள்ளூர் மாவட்டத்தில் காணப்படும் நடுகற்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக பாகசாலை, கீழப்பூடி, தெக்களூர் மற்றும் திருவொற்றியூர் பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள நவகண்ட நடுகற்கள், தூங்குதலை நடுகற்கள் மற்றும் அரிகண்டச் சிற்பங்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. நடுகற்கள் தொடர்பான செய்திகள் தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கியங்களின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், இந்நடுகற்களில் காணப்படும் கல்வெட்டுகள் மூலம் வீரமரபு, கொற்றவை வழிபாடு, உயிர்த் தியாகச் சடங்குகள், நிலஅளிப்பு முறை மற்றும் வீரர்களுக்குச் செய்யப்பட்ட மரியாதை போன்ற செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பாகசாலை மற்றும் கீழப்பூடி பகுதிகளில் காணப்படும் நவகண்ட நடுகற்கள் வீரர்கள் தம் தலையை அறுத்து நேர்ச்சை செலுத்திய மரபினை வெளிப்படுத்துகின்றன.

தெக்களூரில் கண்டறியப்பட்டுள்ள தூங்குதலை நடுகல் கொற்றவை வழிபாட்டுடன் தொடர்புடைய வீரத் தியாகத்தை எடுத்துக்காட்டுகிறது. திருவொற்றியூரில் காணப்படும் அரிகண்டச் சிற்பங்கள் வீர வழிபாட்டு மரபின் சிறப்பினை வெளிப்படுத்துகின்றன. இவ்வாய்வின் மூலம் திருவள்ளூர் மாவட்ட நடுகற்கள் அப்பகுதியின் வீர மரபு, சமய நம்பிக்கை, சமூக அமைப்பு மற்றும் கல்வெட்டு மரபுகளை அறிய உதவும் முக்கிய வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன என்பது தெளிவாகிறது. மேலும், தமிழ் மொழிக் கல்வெட்டுகளுடன் தெலுங்கு கல்வெட்டுகளும் காணப்படுவது திருவள்ளூர் மாவட்டத்தின் பன்மொழி மற்றும் பண்பாட்டு தொடர்புகளை வெளிப்படுத்துகின்றது. இவ்வாய்வு, நடுகற்கள் குறித்த மேலான ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமையும்.

**கலைச்சொற்கள்**: நவகண்டம், அரிகண்டம், தூங்குதலை, அர்ச்சனபோகம், மணியாரம், கொற்றவை, குருவாள்.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வின் முக்கிய நோக்கம் திருவள்ளூர் மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ள நடுகற்களின் வரலாற்று, சமூக மற்றும் சமய முக்கியத்துவங்களை ஆராய்வதாகும். குறிப்பாக நவகண்ட நடுகற்கள், தூங்குதலை நடுகற்கள் மற்றும் அரிகண்டச் சிற்பங்களின் தனித்துவங்களை வெளிக்கொணர்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும், தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடுகல் மரபுகளுடன் திருவள்ளூர் மாவட்டத்தில் காணப்படும் நடுகற்களை ஒப்பிட்டு ஆய்வு செய்வதும் இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இந்நடுகற்களில் காணப்படும் கல்வெட்டுகளின் மூலம் அக்கால சமூக அமைப்பு, அரசியல் சூழல், வீரர்களுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதை மற்றும் சமய நம்பிக்கைகள் போன்ற செய்திகளை வெளிக்கொணர்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும். அதோடு, வீர மரபு, கொற்றவை வழிபாடு மற்றும் உயிர்த் தியாகச் சடங்குகள் தொடர்பான தகவல்களை ஆய்வு செய்து, திருவள்ளூர் மாவட்ட நடுகற்களின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

தமிழர் வரலாற்றிலும் பண்பாட்டிலும் வீரத்தைப் போற்றும் மரபு மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. போரில் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக அவர்களின் வீரத்தையும் தியாகத்தையும் நிலைநிறுத்தும் வகையில் நிறுவப்பட்ட நினைவுக்கற்களே நடுகற்கள் ஆகும். இந்நடுகற்கள் வெறும் நினைவுச் சின்னங்களாக மட்டுமல்லாமல், அக்கால மக்களின் சமூக அமைப்பு, அரசியல் சூழல், சமய நம்பிக்கைகள் மற்றும் வீர வழிபாட்டு மரபுகளை எடுத்துரைக்கும் முக்கியமான வரலாற்றுச் சான்றுகளாகவும் விளங்குகின்றன. குறிப்பாக கல்வெட்டுகளுடன் காணப்படும் நடுகற்கள் மூலம் வீரர்களுக்குச் செய்யப்பட்ட மரியாதை, நிலஅளிப்பு முறை, கொற்றவை வழிபாடு மற்றும் உயிர்த் தியாக மரபுகள் போன்ற செய்திகள் அறியப்படுகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ள நவகண்ட நடுகற்கள், தூங்குதலை நடுகற்கள் மற்றும் அரிகண்டச் சிற்பங்கள் தமிழக நடுகல் மரபில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. பாகசாலை, கீழப்பூடி, தெக்களூர் மற்றும் திருவொற்றியூர் போன்ற பகுதிகளில் காணப்படும் இந்நடுகற்கள் அப்பகுதியின் வீர மரபு மற்றும் சமயச் சடங்குகளை வெளிப்படுத்துகின்றன. மேலும், இந்நடுகற்களில் காணப்படும் கல்வெட்டுகள் அக்கால அரசியல் வரலாறு மற்றும் சமூக வாழ்க்கையை அறிய உதவுகின்றன. எனவே, திருவள்ளூர் மாவட்டத்தில் காணப்படும் நடுகற்களை ஆய்வு செய்வது வரலாற்று மற்றும் தொல்லியல் நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

**நடுகற்கள்**

நடுகற்கள் என்பது போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக அந்நாட்டு மன்னர்களாலும் மக்களாலும் எழுப்பப்பட்ட நினைவுக்கற்களாகும். திருவள்ளூர் மாவட்டத்தில் திருவேற்காடு, பாகசாலை, கீழப்பூடி, திருவொற்றியூர், தெக்களூர் மற்றும் சின்ன நாகப்பூண்டி ஆகிய பகுதிகளில் நடுகற்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஒரு வீரனின் வெற்றி அல்லது வீரத்தைப் போற்றும் வகையில் அவனது நினைவாக இந்நடுகற்கள் நிறுவப்பட்டன. நடுகற்கள் எவ்வாறு நிறுவப்பட்டன என்பதைத் தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது. தொல்காப்பியர் இதனை ஆறு நிலைகளாகப் பிரிக்கிறார்.

*"காட்சி கால் கோள் நீர்ப்படை நடுகல்*
*சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று*
*இரு மூன்று மரபிற் கல்லொடு புணர"*

*(தொல். புறத்திணை, நூற்பா 60)*[1]

இந்நூற்பாவை புறப்பொருள் வெண்பாமாலை பின்வருமாறு விளக்குகிறது:

(1) கற்காண்டல்

(2) கற்கோள் நிலை

(3) கல் நீர்ப்படுத்தல்

(4) கல் நடுதல்


(5) கல் முறை பழிச்சல்

(6) இல் கொண்டு புகுதல்[2]

இதில் "கற்காண்டல்" என்பது கல் உள்ள இடத்தைத் தேர்வு செய்வதாகும். "கற்கோள் நிலை" என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லைக் கொணர்தலைக் குறிக்கிறது. "கல் நீர்ப்படுத்தல்" என்பது நடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லை நீரில் இடுதலாகும். "கல் நடுதல்" என்பது உருவாக்கப்பட்ட நடுகல்லை நிறுவுவதாகும். "கல் முறை பழிச்சல்" என்பது நடுகல்லின் சிறப்பைப் புகழ்ந்து கூறுதலாகும். "இல் கொண்டு புகுதல்" என்பது நடுகல்லிற்காகக் கோயில் அமைப்பதைக் குறிக்கிறது. இவ்வாறு நடுகல்லிற்காக எழுப்பப்படும் கோயிலுக்கு "பெரும்படை" என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் சதிக்கல், நவகண்ட நடுகற்கள் மற்றும் அரிகண்ட நடுகற்கள் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. திருவொற்றியூர், பாகசாலை மற்றும் கீழப்பூடி ஆகிய பகுதிகளில் நவகண்ட நடுகற்கள் காணப்படுகின்றன. மேலும் தெக்களூரில் "தூங்குதலை நடுகல்" ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்நடுகற்கள் கல்வெட்டுகளுடனும் கல்வெட்டுகள் இன்றியும் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் தமிழ் மொழி நடுகல் கல்வெட்டுகள் மட்டுமல்லாது, திருத்தணி வட்டத்தில் தெலுங்கு மொழிக் கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**பாகசாலை நடுகல்**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்தில் அமைந்துள்ள பாகசாலை என்னும் கிராமத்தில் பொன்னியம்மன் கோயிலுக்கு எதிரில் நவகண்ட நடுகல் ஒன்று காணப்படுகிறது. இந்நடுகல்லின் நீளம் 175 செ.மீ., அகலம் 110 செ.மீ. ஆகும். இந்நடுகல் இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் எனப்படும் கன்னரதேவனின் இருபத்தேழாவது ஆட்சியாண்டான கி.பி. 966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது. இதில் "கிழவன் நாகன்" என்பவன் சேந்தமான் குன்றில் நடைபெற்ற போரில் வெற்றி பெற்றதன் நினைவாக, பாசாலியைச் சேர்ந்த கயிலாயன் மகன் சரதேவன் தன் தலையை அறுத்துப் பிடாரிக்குச் சமர்ப்பணம் செய்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



**பாகசாலை நடுகல்**

இந்நடுகல்லின் இடதுபுறத்தில் வீரன் தன் கையால் கழுத்தை அறுத்துக்கொள்வது போன்ற சிற்பம் காணப்படுகிறது. வலதுபுறத்தில் பதினெட்டு வரிகளைக் கொண்ட தமிழ் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இந்நடுகல் ஒரு நவகண்ட நடுகல் ஆகும். இவ்வுயிர்த் தியாகத்தைப் போற்றும் வகையில் அர்ச்சனாபோகமாக அரைக்கால் நிலம் வழங்கப்பட்டு, அதன் வருவாயால் பதினைந்து வாரத்திற்கு ஒருமுறை வழிபாடு செய்ய வேண்டும் எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கல்வெட்டின் வாசகம் வருமாறு:

*யாண்டு இருபத்தேழாவது க-*
*ந்நரதேவற்கு பாசாலி கிழவந்*
*நாகன் சேந்தமானுக்கு*
*ன்றியி.......*
*..வென்று பிடாரிக்கு இவர் பிள்ளை கயிலாய*
*மகநார் தேவன் தலை*
*தந்தான் இவனுக்கு அற்சிநாபோகமாகவு-*
*ற்குண்டில் ஆட்புளிக் கழுவலின் கீழைக்குண்-*
*டில் நிலம் அரைக்கால் இவ்வரைக்-*
*கால்*
*நிலம்*
*இதுவே*
*பதிநை-*
*ஞ்சு வா-*
*ரமொரு*
*திருவமி-*
*ர்த்தி அட்டு*
*வோமா-*
*னோம்.*[3]

**கீழப்பூடி நடுகல்**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிபபட்டு வட்டத்தில் சுரக்காப்பேட்டை ஊருக்கு அருகிலுள்ள கீழப்பூடி கிராமத்தில், கொற்றலை ஆற்றங்கரையோரம் அமைந்துள்ள நலபுரியம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள நிலப்பகுதியில் இந்நடுகல் காணப்படுகிறது. இந்நடுகல் மாவலி வாணவராயர் ஆட்சிக்காலத்தைச் சார்ந்ததாகும். இதன் காலம் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. இதில் காணப்படும் வீரன் காதில் குண்டலம், கழுத்தில் மணியாரம், கைகளில் காப்பு, கால்களில் தண்டுகள் அணிந்தும், தலைமுடியைச் சடாபாரமாக அமைத்தும், இடையில் கச்சை அணிந்தும் காணப்படுகின்றான். வீரனின் இடப்புறத்தில் ஒரு ஈட்டி காணப்படுகிறது. வலப்புறத் தொடைக்கருகில் ஒரு கையும் ஒரு காலும் துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. வீரன் இடது கையைத் தொடையின் மீது வைத்தும், வலது கையில் குருவாளை உயர்த்திப் பிடித்தும் காணப்படுகின்றான். மாவலி வாணவராயர் ஆட்சியில் "அதியரையர் அடிகள் தந்தியனாறன்" என்பவன் போரில் உயிரிழந்ததன் நினைவாக, "மழப்பட்டியான்" என்பவன் ஒரு ஆண்டுக்குள் தன்னுயிரை மாய்த்துக்கொள்வேன் என்று சபதமிட்டு, கொற்றவைக்காக நவகண்டம் செய்து வீரமரணம் அடைந்தான். அவனது நினைவாக அவன் குடும்பத்தாருக்கு "உதிரப்பட்டி" நிலம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:

*ஸ்வஸ்திஸ்ரீ மாவலி வாணராயர்*
*மகன் விஞ்சா வாணராய பிருதிவி ராச்சியம்*
*சேவா*
*ல்ஓராட்டை நாளிற்தனு னான்று செத்தான்மழ*
*படமுயன் மேற்கே கிடந்தபடி குடுத்தேனி*
*ன்றப் புக்கூர் தட்டிப்புக்கூர் எப்பேர்ப்பட்ட*
*புஞ்செய்*

என்று தொடர்ந்து 25 வரிவரை வெட்டப்பட்டுள்ளது.[4]

**தெக்களூர் நடுகல்**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்தில் அமைந்துள்ள தெக்களூர் என்னும் கிராமத்தில் தனியார் வயலில் ஒரு நடுகல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்நடுகல் "தூங்குதலை நடுகல்" ஆகும். "தூங்குதலை" என்பது போரில் வெற்றி பெறுவதற்கு முன்போ அல்லது வெற்றிக்குப் பிறகோ, கொற்றவைக்குச் சமர்ப்பணமாகத் தன் தலையை வாளால் அறுத்துக்கொள்வதைக் குறிக்கிறது. இத்தகைய நடுகற்கள் பொதுவாகச் சோழர் காலத்திலேயே அதிகமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் திருவள்ளூர் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்நடுகல் இராட்டிரகூட மன்னனான கன்னரதேவனின் பத்தாவது ஆட்சியாண்டில் நிறுவப்பட்டுள்ளது.

அதன் கல்வெட்டு விவரம் பின்வருமாறு:

*ஸ்வஸ்தி ஸ்ரீ*
*க்கரையர் பிள்ளை....*
*ன்னேன் அஞ்சியார் முத்-*
*தரைசரு கொம்மி நங்கையாரு-*
*க்குத் தூங்குதலை கு-*
*துத்தேன்*
*அரட்டனேன் இக*
*.. வேனாடு நடுவித்-*
*தேன் இவர் தம்பி கெ....*
*...த் திண்ணேன் (5)*

**திருவொற்றியூர் அரிகண்டச் சிற்பங்கள் மற்றும் தூங்குதலை வீரக்கல்:**[6]

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயிலின் வெளிப்பகுதியில் ஏழு அரிகண்டச் சிற்பங்களும், ஒரு தூங்குதலை நடுகல்லும் கண்டறியப்பட்டுள்ளன. இச்சிற்பங்களின் காலம் கி.பி. 10 முதல் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. அனைத்து நடுகற்களும் ஒரே வரிசையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



**திருவொற்றியூர் அரிகண்டச் சிற்பங்கள் மற்றும் தூங்குதலை வீரக்கல்**

அரிகண்ட வீரர்கள் வலது கையால் கழுத்தில் கத்தியை குத்தியவாறும், இடது கையால் தலைமுடியைப் பிடித்தவாறும் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளனர். இவ்வீரர்களில் ஒருவரின் கழுத்தில் மட்டும் பூமாலை காணப்படுகின்றது; மற்ற வீரர்கள் ஆபரணங்கள் அணிந்த நிலையில் காணப்படுகின்றனர். இச்சிற்பங்கள் வீரத் தியாக மரபையும் கொற்றவை வழிபாட்டையும் எடுத்துரைக்கும் முக்கியமான கலைச்சான்றுகளாக விளங்குகின்றன.

மேலும்,இச்சிற்பத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள தூங்குதலை வீரக்கல் தனித்துவமான அமைப்பைக் கொண்டதாகும். எட்டு நவகண்ட மற்றும் அரிகண்ட வீரக்கற்களில், வீரபத்திரர் சிலைக்கு அருகில் அமைந்துள்ள இத்தூங்குதலை வீரக்கல் குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாக இவ்வகை சிற்பங்களில் வீரன் பத்மாசன நிலையில் அமர்ந்திருப்பார். அவரது கைகள் தியான நிலையிலோ அல்லது அஞ்சலி ஹஸ்த நிலையிலோ காணப்படும். மேலும், அவரது தலை மூங்கில் குச்சியில் கட்டப்பட்டிருக்கும். துர்கைக்குப் பூஜைகள் செய்த பின்னர், மற்றொருவர் வீரனின் தலையை வாளால் வெட்டுவார். தலை வெட்டப்பட்டவுடன் அது மேல்நோக்கித் தூக்கப்படும்.ஆனால், திருவொற்றியூரில் காணப்படும் இவ்வீரக்கல்லின் அமைப்பு இதிலிருந்து மாறுபட்டதாகும். இதில் வீரனே மண்டியிட்ட நிலையில் தன் கையிலுள்ள வாளால் தலையைத் தானே வெட்டிக்கொள்வது போன்ற காட்சி வடிக்கப்பட்டுள்ளது. இது வீரத் தியாகத்தின் உச்சநிலையையும், தெய்வத்திற்கு உயிரையே அர்ப்பணிக்கும் சமய நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது."தூங்குதலை" வழங்கும் மரபு மணிமேகலை, கலிங்கத்துப்பரணி போன்ற தமிழ் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் இடம்பெறும் சில அடிகள் பின்வருமாறு:

*"உலையா உள்ளமொடு உயிர்க்கடன் இறுத்தோர்*
*தலைதூங்கு நெடுமரம்...."*

*(மணிமேகலை, சிறைவிடு காதை- 23)*[7]

*"வீங்குதலை நெடுங்கழையின் விசைதொறும்*
*திசைதொறும் விழித்துநின்று தூங்கு தலை.."*

*(கலிங்கத்துப்பரணி பாடல் எண் 117)*[8]

இவ்வரிகள் வீரர்கள் தெய்வத்திற்காகத் தங்கள் உயிரையே அர்ப்பணித்த மரபினை எடுத்துரைக்கின்றன. இதன் மூலம் வீர வழிபாடு, கொற்றவை மரபு மற்றும் உயிர்த் தியாகச் சடங்குகள் தமிழக சமூக வாழ்வில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

**முடிவுரை**

திருவள்ளூர் மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ள நடுகற்கள் அப்பகுதியின் வீர மரபு, சமய நம்பிக்கை மற்றும் சமூக வாழ்க்கையை எடுத்துரைக்கும் முக்கியமான வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. பாகசாலை, கீழப்பூடி, தெக்களூர் மற்றும் திருவொற்றியூர் போன்ற பகுதிகளில் காணப்படும் நவகண்ட நடுகற்கள், தூங்குதலை நடுகற்கள் மற்றும் அரிகண்டச் சிற்பங்கள் ஆகியவை வீரமரபு மற்றும் கொற்றவை வழிபாட்டுடன் தொடர்புடைய தனித்துவமான சான்றுகளாக அமைந்துள்ளன. இந்நடுகற்களில் காணப்படும் கல்வெட்டுகள் மூலம் அக்கால அரசியல் அமைப்பு, வீரர்களுக்குச் செய்யப்பட்ட மரியாதை, நிலஅளிப்பு முறை மற்றும் சமய நம்பிக்கைகள் போன்ற பல்வேறு செய்திகள் அறியப்படுகின்றன. மேலும், தமிழ் மொழிக் கல்வெட்டுகளுடன் தெலுங்கு கல்வெட்டுகளும் காணப்படுவது திருவள்ளூர் மாவட்டத்தின் பன்மொழி மற்றும் பண்பாட்டு தொடர்புகளை வெளிப்படுத்துகின்றது. எனவே, திருவள்ளூர் மாவட்ட நடுகற்கள் தமிழகத்தின் தொல்லியல், கல்வெட்டியல் மற்றும் பண்பாட்டு வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் முக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இவ்வாய்வு நடுகற்கள் குறித்த மேலான ஆய்வுகளுக்கு அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**மேற்கோள் நூல்கள்**


1. இளம்பூரணர்(உ.ஆ),தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற். எண் 5.
2. இரா. நாகசாமி, கல்வெட்டியல் (தொல்லெழுத்தியலும், கல்வெட்டியலும்), பக். எண் 125.
3. ச.கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி XVII (திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி I), பக். எண் 86-87.
4. ப.வெங்கடேசன், திருவள்ளூர் மாவட்டத்தில் நடுகற்கள்(திருவள்ளூர் மாவட்டத் தடயங்கள்). பக். எண் 51.
5. ச. கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி XVII(திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி I), பக். எண் 80.
6. பார்த்திபன். வே, திருவொற்றியூர் அரகண்டச் சிற்பங்கள், ஆவணம் 34, பக்கம் எண் 249
7. துரைசாமிப் பிள்ளை. சு, மணிமேகலைச் சுருக்கம், உரைக் குறிப்புகளுடன், சிறைவிடு காதை 23.
8. செயங்கொண்டார், கலிங்கத்துப் பரணி மூலமும் உரையும், பாடல் எண்.117.

**துணை நூற்பட்டியல்**


1. இளம் பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் – பொருளதிகாரம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2008.
2. காசிநாதன். நடன (ப.ஆ), திருவள்ளூர் மாவட்ட தடயங்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2014.
3. கிருஷ்ணமூர்த்தி. ச, நடுகற்கள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2016.
4. கிருஷ்ணமூர்த்தி. ச, தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி XVII (திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி I), தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2021.
5. செயங்கொண்டார், கலிங்கத்துப் பரணி மூலமும் உரையும், ஸ்ரீ பாரதி அச்சகம், சென்னை, 1955.
6. துரைசாமிப்பிள்ளை. சு, மணிமேகலைச் சுருக்கமும் உரைக் குறிப்புகளுடன், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புகழகம், திருநெல்வேலி, 1943.
7. நாகசாமி. இரா, கல்வெட்டியல் (தொல்லெழுத்தியலும், கல்வெட்டியலும்), தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2010.
8. Nagaswamy. R, Seminor on Hero Stones, state Department of Archaeology, Chennai, 1974.